**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**

**அசல் வழக்கு எண். 28/2013**

DW1 – திரு.முரளி நாள். 24.04.2023

(1969 ம் ஆண்டில் 44 வது பிரிவின்படி) திரு.தெ.மனிஷ்குமார், பி.எஸ்.சி., பி.எல் (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற Bench clerk (இளநிலை உதவியாளர்) திரு.எஸ்.வாசுதேவன் என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

**குறுக்கு விசாரணை**

**1.** எங்கள் கிராமத்தில் கருங்குடி உடையார் குடியிருப்பு என ஒரு குடியிருப்பு உள்ளது என்றால் சரிதான். மேற்படி குடியிருப்பில் 30 வீடுகள் இருக்கும். எங்கள் கிராமத்தில் உடையார் குடியிருப்பை தவிர நாங்கள் குடியிருக்கும் பகுதியில் எத்தனை வீடுகள் உள்ளது என்றால் சுமார் 50 வீடுகள் இருக்கிறது. வாதிகள் குடியிருப்பில் வாதிகள் சமூகத்தை சேர்ந்தவர்கள் மட்டும் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். மேலும் நான் குடியிருந்து வரும் பகுதியில் நான்கு சமூகத்தினர் குடியிருந்து வருகிறார்கள்.

2. கருங்குடி கண்மாய் கரைக்கு மூன்று பக்கமும் கரை உள்ளது என்றால் சரிதான். மேற்படி மூன்று பக்கமும் கண்மாய் கரையின் நீளம் எவ்வளவு இருக்கும் என்றால் சுமார் 4 கி.மீ தூரம் இருக்கும். மேற்படி கருங்குடி கண்மாய் கரைக்கு மூன்று பக்கமும் கரை என்பது பெரிய கண்மாய் என்றால் சரிதான். கண்மாயின் கொள்ளவு எவ்வளவு என்று என்னால் துல்லியமாக சொல்ல முடியாது. கண்மாயின் பரப்பளவு எவ்வளவு விஸ்தீரணம் இருக்கும் என்றால் அதைபற்றி எனக்கு தெரியாது. கண்மாயின் ஆயக்கட்டு எத்தனை ஏக்கர் என்றால் சரியாக சொல்ல முடியாது.

3. கண்மாயின் வடக்கு கரையில் கழுங்கு உள்ளதா என்றால் உள்ளது. கீழ்பக்கம் உள்ள கண்மாய் கரை தென்வடலாக உள்ளது என்றால் சரிதான். தென்வடல் கண்மாய் கரையில் வடக்கு பக்கத்தில் கழுங்கு உள்ளது என்றால் வடகரையில் உள்ளது. வட புறம் எங்கள் கண்மாயின் எல்லையானது திருச்சி – இராமேஸ்வரம் சாலை வரை உள்ளது என்றால் சரிதான். மேற்படி திருச்சி – இராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலை என்பது எங்கள் கண்மாய்க்கு மேல்புறம் என்றால் சரிதான்.

4. வடபுறம் இருக்ககூடிய கண்மாய் கரையில் திருச்சி – இராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலை இருந்து வாதிகள் குடியிருப்புக்கு செல்லக்கூடிய சாலை உள்ளது என்றால் சரியல்ல வடபுறம் கண்மாய் கரைக்கும் அடுத்து தான் மேற்படி சாலை உள்ளது. எனக்கு 58 வயதாகிறது. நான் பிறந்தது முதல் கருங்குடி கிராமத்தில் தான் வசித்து வருகிறேன். மேற்படி கண்மாய் எத்தனை முறை தூர்வாரப்பட்டது என்றால் எனக்கு தெரிந்து சுமார் 4 , 5 முறை தூர் வாரப்பட்டது.

5. வடபுறத்தில் உள்ள கழுங்குக்கும் தாவா சொத்திற்கும் எவ்வளவு தூரம் உள்ளது என்றால் 1/2 கி.மீ தூரம் இருக்கும். எங்கள் கண்மாயின் உள்வாயில் நஞ்சை இடங்கள் உள்ளது என்றால் சரிதான் மேற்படி நஞ்சை நிலங்கள் எந்த ஊருக்கு பாத்தியப்பட்டது என்றால் வடவயலுக்கு கொஞ்சமும், மூத்தினார் கண்மாய்க்கு பாத்தியப்பட்ட இடங்கள் ஆகும். மேற்படி நஞ்சை நிலங்களில் உள்ள உபரி நீர் எங்கள் கண்மாய்க்கு தான் வரும் என்றால் சரிதான்.

**(வாதிகள் வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக சாட்சியம் இத்துடன் நிறுத்தி வைக்கப்படுகிறது)**